(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **73.]**

பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2021 மே 04 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

சமூகமளித்தோர்:

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன, சபாநாயகர்

கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ அங்கஜன் இராமநாதன், குழுக்களின் பிரதித் தவிசாளர்

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ, பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்

கௌரவ ரோஹித அபேகுணவர்தன, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

கௌரவ மஹிந்த அமரவீர, சுற்றாடல் அமைச்சர்

கௌரவ உதய கம்மன்பில, வலுசக்தி அமைச்சர்

கௌரவ தினேஷ் குணவர்தன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன, வர்த்தக அமைச்சர்

கௌரவ எஸ்.எம். சந்திரசேன, காணி அமைச்சர்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன், அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ நிமல் சிறிபால த சில்வா, தொழில் அமைச்சர்

கௌரவ டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் அமைச்சர்

கௌரவ வாசுதேவ நாணாயக்கார, நீர்வழங்கல் அமைச்சர்

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண, பெருந்தோட்ட அமைச்சர்

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ், கல்வி அமைச்சர்

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ பிரசன்ன ரணதுங்க, சுற்றுலாத்துறை அமைச்சர்

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல, வெகுசன ஊடக அமைச்சர்

கௌரவ சமல் ராஜபக்ஷ, நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ நாமல் ராஜபக்ஷ, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

கௌரவ காமினி லொக்குகே, போக்குவரத்து அமைச்சர்

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி, சுகாதார அமைச்சர்

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி, நீதி அமைச்சர்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல, திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ லசந்த அலகியவன்ன, கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ அஜித் நிவாட் கப்ரால், நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ சிறிபால கமலத், மகாவலி வலயங்களை அண்டியுள்ள கால்வாய்களின் அகழிகள் மற்றும் குடியிருப்புக்கள் பொது உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா, நகர அபிவிருத்தி, கரையோரப் பாதுகாப்பு, கழிவுப் பொருள் அகற்றுகை, சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ டி.வீ. சானக, விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ சிசிர ஜயகொடி, சுதேச வைத்திய முறைகளின் மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ அநுராத ஜயரத்ன, கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ பியங்கர ஜயரத்ன, வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன, ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர்

கௌரவ தயாசிறி ஜயசேக்கர, பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஜீவன் தொண்டமான், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா, சேதன மற்றும் இயற்கை பசளை உற்பத்தி, விநியோகங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ துமிந்த திசாநாயக்க, சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர்

கௌரவ விமலவீர திசாநாயக்க, வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ சனத் நிசாந்த, கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ அருந்திக்க பர்னாந்து, தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே, ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ சுசில் பிரேமஜயந்த, கல்விச் சீர்திருத்தங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சர்

கௌரவ தாரக்க பாலசூரிய, பிராந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ விஜித பேருகொட, அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ பிரசன்ன ரணவீர, பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ ரொசான் ரணசிங்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ லொஹான் ரத்வத்தே, இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் மற்றும் சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ, நெல் மற்றும் தானியவகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழ வகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

கௌரவ நிமல் லான்சா, கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஜானக வக்கும்புர, கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி மற்றும் அதுசார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ கஞ்சன விஜேசேகர, அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ தேனுக விதானகமகே, கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ ச. வியாழேந்திரன், பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ ஜயந்த சமரவீர, களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ செஹான் சேமசிங்க, சமுர்த்தி, வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ இந்திக அனுருத்த ஹேரத், கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டிடப் பொருட் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ கனக ஹேரத், கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கை, தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ டீ. பி. ஹேரத், கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

கௌரவ அமரகீர்த்தி அதுகோரள

கௌரவ கபில அதுகோரல

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டிரான் அலஸ்

கௌரவ நஸீர் அஹமட்

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ ஜகத் குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பிரேமலால் ஜயசேக்கர

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ அனுப பஸ்குவல்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ நலின் பிரனாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ சஜித் பிரேமதாச, பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ உத்திக பிரேமரத்ன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ அஜித் ராஜபக்ஷ

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ சந்திம வீரக்கொடி

கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ குமார வெல்கம

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ எம்.ஏ. சுமந்திரன்

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ ஜோன் செனவிரத்ன

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ சமன்பிரிய ஹேரத்

கௌரவ மர்ஜான் பளீல்

கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்***: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

I

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சவாலுக்குட்படுத்தப்பட்ட ‘இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தம்)’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

இச் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல எனவும் வருகை தந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மையொன்றின் மூலம் நிறைவேற்றப்படலாம் எனவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.”

II

“பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ரன்ஜன் ராமநாயக்க அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வறிதாகியதன் காரணமாக அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள் அக்குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற நிலையியற் கட்டளை 127(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார் என்பதை அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.”

2. **பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை மற்றும் பத்திரங்கள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2021.03.01 முதல் 2021.03.31 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள்

பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு; மற்றும்

(ii) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயமான) 10(அ) ஆம் பிரிவின் கீழ் இறக்குமதிப் பொருட்கள் மீதான சுங்கத் தீர்வை மீதான மேலதிக கட்டண அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 பெப்ரவரி 01 ஆம் திகதிய 2213/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அப்பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) நெடுஞ்சாலைகள் அமைச்சர்—

(i) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 நவம்பர் 17 ஆந் திகதிய 2202/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 நவம்பர் 21 ஆந் திகதிய 2202/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 திசெம்பர் 14 ஆந் திகதிய 2206/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2020 திசெம்பர் 16 ஆந் திகதிய 2206/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 சனவரி 13 ஆந் திகதிய 2210/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 சனவரி 18 ஆந் திகதிய 2211/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 பெப்ரவரி 11 ஆந் திகதிய 2214/58 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(viii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2021 மார்ச் 03 ஆந் திகதிய 2217/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை ;

(ix) 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 6(2) ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2020 பெப்ரவரி 09 ஆம் திகதிய 2214/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(x) திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் சிலோன் டயர் மெனுபக்ஷரிங் கம்பெனி (பிறைவேட் லிமிட்டெட்) தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மார்ச் 05 ஆம் திகதிய 2217/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(xi) திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் கொழும்பு சர்வதேச நிதிசார் நிலைய கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 மார்ச் 23 ஆம் திகதிய 2220/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(xii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஏப்பிறல் 07 ஆம் திகதிய 2222/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) தொழில் அமைச்சர்—

(i) சர்வதேச தொழில் தாபனத்தினால் அதன் 2017 ஆம் ஆண்டுக்கான 106 வது அமர்வில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதப்புரை;

(ii) சர்வதேச தொழில் தாபனத்தினால் அதன் 2019 ஆம் ஆண்டுக்கான 108 வது அமர்வில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதப்புரை; மற்றும்

(iii) சர்வதேச தொழில் தாபனத்தினால் அதன் 2019 ஆம் ஆண்டுக்கான 108 வது அமர்வில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சமவாயம்

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அப்பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) நெடுஞ்சாலைகள் அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை, நெடுஞ்சாலைகள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கல்வி அமைச்சர்—

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழ் கல்வி அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தின் கீழ் முகாமைத்துவம் மற்றும் முயற்சியாளர் நலனியல், சந்தைப்படுத்தல், மனிதவள முகாமைத்துவம், வியாபார முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் நிதி ஆகிய துறைகளை தாபித்தல் தொடர்பில் ஆக்கப்பட்டு, 2021 மார்ச் 03 ஆம் திகதிய 2217/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழ் கல்வி அமைச்சரால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலைகள் மற்றும் கலாசாரப் பீடத்தில் தகவல் தொழில்நுட்பவியல் துறையினை தாபிப்பது தொடர்பில் ஆக்கப்பட்டு, 2021 மார்ச் 03 ஆம் திகதிய 2217/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அப்பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) கடற்றொழில் அமைச்சர், 2019 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை, கடற்றொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) சுற்றாடல் அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை, சுற்றாடல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்: அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா , அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டமூலம்;

(ii) சனாதிபதி நிதியம் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை- 2018;

(iii) 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்;

(iv) 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான கட்டளை; மற்றும்

(v) 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:

(1) ரன்ன, திஸ்ஸ வீதி, கஹதாவ, இல. 129 இல் வதியும் திரு. டப்ளியூ.ஏ. பேமசந்திரவினது 2021.03.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மஹிந்த அமரவீர சமர்ப்பித்தார்.

(2) மெதவச்சிய, வைத்தியாசலைக்கு முன்னாலுள்ள வீதி, இல. 131/பீ எனும் முகவரியில் வதியும் திரு. எச்.எம்.கே. திசாநாயக்கவினது 2020.12.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எஸ்.எம். சந்திரசேன சமர்ப்பித்தார்.

(3) கண்டி, முல்கம்பொல, ஹீரஸ்ஸகல, இரண்டாம் ஒழுங்கை, இல. 71/35/1 இல் வதியும் திரு. என்.கே. சூரியபண்டாரவினது 2020..11.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எஸ்.பீ திசாநாயக்க சமர்ப்பித்தார்.

(4) (i) பன்னிபிட்டிய, எரவ்வல, ரத்ன மாவத்தை, இல. 545/1பீ யில் வதியும் திரு. சீ. அபேவிக்கிரமவினது 2021.02.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) மாத்தறை, நாவிமன வடக்கு, சோமாராம வீதி, அதிரப்பளை தோட்டம் எனும் முகவரியில் வதியும் திருமதி பி.ஏ. சந்திராவதியினது 2021.01.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ புத்திக பத்திறண சமர்ப்பித்தார்.

(5) ரிதீகம, கட்டுபிலகொல்ல, "சிரி நிவஸ" எனும் முகவரியில் வதியும் திரு. பி.ஜி. சிரில் குணரத்னவினது 2021.02.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சாந்த பண்டார சமர்ப்பித்தார்.

(6) (i) கொலம்பகேஆர, ஹல்மில்லஆர, 17 ஆம் வீதி, இல. 896/ஏ யில் வதியும் திரு. கே.டப்ளியூ. காமினி கருணானந்தவினது 2021.02.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) களனி, பிலபிட்டிய, ஜயதிலக மாவத்தை, இல. 112/2ஏ யில் வதியும் திரு. ஆர்.ஜே.எச். ஜயசுந்தரவினது 2021.02.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன சமர்ப்பித்தார்.

(7) கம்பஹா, அகரவிட, இல. 201 இல் வதியும் திரு. கே. விஜய குணவர்தனவினது 2021.01.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட சமர்ப்பித்தார்.

(8) பண்டாரகம, குங்கமுவ, குணானந்த மாவத்தை, இல. 123 ஏ யில் வதியும் திரு. எம்.ஏ. கபிலவினது 2021.03.01 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அனுப பஸ்குவல் சமர்ப்பித்தார்.

(9) (i) பேராதெனிய, உடபேராதெனிய, "துஷாரகிர", இல. 8 இல் வதியும் திரு. எம். சிசிர வில்ஃபிரட் கருணாரத்னவினது 2021.03.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) கிரிபத்கும்புர, புளுமுல்ல, இல. 185/பீ யில் வதியும் திரு. ஆர்.எச்.ஏ.எம்.ஜே.பி. கருணாரத்னவினது 2021.02.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ வஸந்த யாபாபண்டார சமர்ப்பித்தார்.

(10) கம்பஹா, விஜய வீதி, இல. 96/1 இல் வதியும் திருமதி பத்மா மாலனீ மஹகமஆரச்சியினது 2021.01.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ எம்.டப்ளியூ.டி சஹன் பிரதீப் விதான சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

5. பாராளுமன்ற அமர்வு : பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2020 ஒக்டோபர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை இருக்குமாக. மு.ப. 11.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை: வர்த்தக அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் சமர்ப்பித்த பிரேரணை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் வர்த்தக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2021 சனவரி 12 ஆம் திகதிய 2210/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.03.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 1): பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் சமர்ப்பித்த பிரேரணை,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22(1) ஆம் பிரிவின் கீழ் போத்தலில் அடைக்கப்பட்ட மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 07 ஆந் திகதிய 2209/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2021)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 2): பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் சமர்ப்பித்த பிரேரணை,— திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 07 ஆந் திகதிய 2209/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2021)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 3): பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் சமர்ப்பித்த பிரேரணை,— திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக்

கட்டளைச் சட்டத்தின் 4 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 07 ஆந் திகதிய 2209/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 05/2021)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல. 4): பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் சமர்ப்பித்த பிரேரணை,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 சனவரி 11 ஆந் திகதிய 2210/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2021.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 06/2021)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11. சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 3 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

4 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 15 ஆம், 16 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அதற்கான கொடுப்பனவு அத்தகைய ஏற்றுமதி எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இடம் பெற்றுள்ளதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 28 ஆம், 29 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பால தான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை உடடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(ஆ) உட்பந்தி (iiஅ) வில், "சேமிப்பிட வியாபாரத்தின் கீழ் மீள் ஏற்றுமதியின் நோக்கத்துக்காக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதற்கான கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப் பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்றனவான சேமிப்பிட வியாபாரத்தின்கீழ் ஏற்றுமதியின் நோக்கத்துக்காக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் எவையேனும் பண்டங்கள்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 10 ஆம், 11 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 19 ஆம் வரியை உடடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(ஈ) உட்பந்தி (v) இல், "அதற்கென வெளிநாட்டு நாணயத்தில் வங்கி ஒன்றுக்கூடாகக் கொடுப்பனவு பெறப்படுவதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதற்கென அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவு பெறப்படுவதும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

"(உ) உட்பந்தி (vi) இல், "அதற்கான கொடுப்பனவு வங்கிய{டாக வெளிநாட்டு நாணயத்திலாகும்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதற்கான கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்ற தாகும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

"(ஊ) உட்பந்தி (vii) இல், "சேவைகளுக்கான கொடுப்பனவு, அத்தகைய சேவைகள் தைத்த ஆடைகளின் ஏற்றுமதிக்கு வசதியளிப்பதற்கு அத்தியாவசியமான சேவைகளாக ஆணையாளர் தலைமையதிபதியினால் இனங்காணப்பட்ட அளவுக்கு வங்கியொன்றின் ஊடாக அந்நிய நாணயத்தில் பெறப்படுகின்றனவோ அந்தச் சேவைகள்.". என்னும் சொற்களுக்குப் பதிலாக "எந்தச் சேவைக்கான கொடுப்பனவு, அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படுகின்றதோ அத்தகைய சேவை தைத்த ஆடைகளின் ஏற்றுமதிக்கு வசதியளிப்பதற்கு அவசியமான சேவையாக ஆணையாளர் தலைமையதிபதியினால் இனங்காணப்பட்ட அளவுக்கு அந்தச் சேவை.". என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) (இ) என்னும் பந்தியில், "இலங்கைக்கு வெளியேயிருந்து இலங்கையிலுள்ள வங்கியொன்றின்மூலம் வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக இலங்கைக்கு வெளியேயிருந்து வெளிநாட்டு

நாணயத்தில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்." என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் இரண்டாம் பிரிவை உடடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

"(3) ஏழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்குகை தொடர்பிலான கொடுப்பனவு, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஏற்றுமதி எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இடம்பெற்றுள்ளதோ அல்லது அத்தகைய சேவையின் வழங்குகை எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படாதிருக்கின்றமை எவ்வாறிருப்பினும், அத்தகைய பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன அல்லது சேவைகள் புரியப்படுகின்றன என ஆணையாளர் தலைமையதிபதியின்

திருப்திக்கு எண்பிக்கப்படுமிடத்து, 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதம் அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் வழங்குகையின்மீது ஏற்புடையாதாதலாகாது.";

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்

7 ஆம் பக்கத்தில் 6 முதல் 10 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:—

‘‘எவரேனுமாள் —

(அ) அவரது வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதியை விஞ்சினாலொழிய; அல்லது

(ஆ) அவரது மொத்த வழங்குகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனவென ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கின்ற ஓர் ஏற்றுமதியாளராக அவர் இருந்தாலொழிய; அல்லது

(இ) ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவாறாகப் பதிவு செய்யப்பட்ட இனங்காணப்பட்ட வழங்குநரொருவராக எளிமையாக்கப்பட்ட சேர்பெறுமதி வரித்திட்டத்தின் நோக்கத்துக்காகப் பதிவுசெய்வதற்கு அத்தகைய ஆள் விரும்பினாலொழிய,

ஆணையாளர் தலைமையதிபதியினால் நிருவகிக்கப்பட்ட எளிமையாக்கப்பட்ட; "

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "(v) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:—

"(vi) ஏழாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பண்டங்களினது அல்லது சேவைகளினது வழங்குகை தொடர்பிலான கொடுப்பனவு, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஏற்றுமதி எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக இடம்பெற்றுள்ளதோ அல்லது அத்தகைய சேவையின் வழங்குகை எந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக வழங்கப்படுகின்றதோ அந்தக் காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றினுள் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றினூடாக வெளிநாட்டு நாணயத்தில் பெறப்படாதிருப்பின்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம்

8 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(க) இந்தத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இறக்குமதி.".

கொடுப்பனவு அத்தகைய சேவையின் வழங்குகையானது எந்த காலப்பகுதியின் முடிவிலிருந்து ஆறு மாதங்களைக் கொண்ட"

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 மற்றும் 10 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக”என பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12. உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் : இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

‘‘சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக” பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 5 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

6 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் இரண்டாம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"படுத்தப்பட்டதுமான ஏதேனும் தொழிற்கல்வி நிறுவனத்தின்”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் பக்கத்தில் இரண்டாம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"நிதிகளின் ஆகுசெலவானது அத்தகைய நிதிய நிறுவனத்தின் "

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 முதல் 17 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

18 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் பதின்மூன்றாம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"ஆண்டில் ஈடுபட்டதுமான மொத்த வருமானத்தை வதிவற்ற"

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

19 முதல் 21 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

22 ஆம் வாசகம்

16 ஆம் பக்கத்தில் பதினோராம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், “ இரட்டை வரிவிதிப்பு”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

23 முதல் 39 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

40 ஆம் வாசகம்

31 ஆம் பக்கத்தில் 2 முதல் 8 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன் மூலம்"

(5) அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் உட்பட எவரேனும் ஆளினால் கொடுப்பனவு ஒன்றிற்கு விபரத்திரட்டொன்று அல்லது விபரத்திரட்டின் பாகமொன்று தயாரிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஆள் எந்தளவிற்கு

அத்தகைய விபரத்திரட்டினை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளாரோ அந்தளவினை தனிவேறாக குறித்துவைத்து சான்றுப்படுத்தல் வேண்டும் அத்துடன் அவரால் பரிசோதிக்கப்பட்ட ஆவணங்களையும் எந்தத் தகவலை அடிப்படையாகக் கொண்டிருந்தாரோ அந்தத் தகவலைக் குறித்துரைத்தலும் வேண்டும். அத்தகைய சான்றுப்படுத்துகை விபரத் திரட்டுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் சொல்லப்பட்ட சான்றுப்படுத்துகை சொல்லப்பட்ட விபரத்திரட்டின் முக்கிய பாகமாக இருப்பதாக கருதப்படுதலும் வேண்டும்."

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

41 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

42 ஆம் வாசகம்

32 ஆம் பக்கத்தில் பத்தொன்பதாம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"தலைமையதிபதி வரிமதிப்பீட்டை அல்லது வேறு முடிபை மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபையும் முடிபுக்கான காரணங்களையும் எழுத்தில் வரிசெலுத்துனருக்கு அறிவித்தலும் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

43 முதல் 46 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

47 ஆம் வாசகம்

35 ஆம் பக்கத்தில் 26 முதல் 31 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"மோசடியாக தயாரிக்கப்பட்டஅல்லது சான்றுப்படுத்தப்பட்ட ஆவணங்களுக்கும் தண்டனை விதிக்கும் ஏற்பாடுகள்

190அ. உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமை யதிபதிக்கு கொடுத்துதவப்படவேண்டிய -

(அ) ஏதேனும் ஆவணத்தை அல்லது தகவலை மோசடியாக தயாரிக்கின்ற; அல்லது

(ஆ) ஆவணமொன்றை மோசடியாக சான்றுப் படுத்துகின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையில் சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஆளாதலும் வேண்டும்.";.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

36 ஆம் பக்கத்தில் 1 முதல் 25 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

48 ஆம் வாசகம்

35 ஆம் பக்கத்தில் 14 முதல் 21 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(6) அப்பிரிவின் "சிறிய நடுத்தர பொறுப்பு முயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் -

(அ) அச்சொல்லமைப்பின் (ஆ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுக -

"(ஆ) உருவகம் ஒன்றாகவுள்ள இணையாளர்இல்லாத (ஈ) என்னும் பந்திக்குட்பட்ட ஆள்";

(ஆ) அச்சொல்லமைப்பின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் -

"(ஈ) அத்தகைய இணையாளர் ஓர் உருவகமாக அல்லது உருவகங்களாகவிருப்பின் அவ்வாளின் அல்லது அவரது இணையாளரது வருடாந்த முழுமொத்த விற்பனை வரவு ரூ. 500,000,000 க்கு குறைவாக இருத்தல்.'';.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

49 மற்றும் 50 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

51 ஆம் வாசகம்

46 ஆம் பக்கத்தில் 1 முதல் 7 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"'உட்பந்தி (1அ) வின் ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் தனியாளினது பின்வரும் ஈட்டுகைகளும் இலாபங்களும் 2021,ஏப்பிறல் 1 ஆந் தேதியில் இருந்து பயனுறும் வகையில் ஆகக்கூடியது 14 சதவீதத்தினால் வரிவிதிக்கப் படுதல் வேண்டும் :-

(அ) இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணம் தொடர்பில் பெறப்பட்ட பிரதிபயன்;

(ஆ) எவரேனும் தனியாளினால் புதுப்பிக்கப்படற்பாலதான சக்தி வழங்கலை பயன்படுத்துவதன்மூலம் பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தை தேசிய நெய்யரிக்கு வழங்குவதன்மீது பெறப்பட்ட தொகைகள்.".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

51 ஆம் பக்கத்தில் 12 ஆம் வரியை உடனடுத்து பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஔஔ) 2021, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையில், கம்பெனி ஒன்றினால் புதுப்பிக்கப்படற்பாலதான சக்தி வளத்தை பயன்படுத்தி பிறப்பிக்கப்பட்ட மின்சாரத்தை தேசிய நெய்யரிக்கு வழங்குவதிலிருந்தான ஈட்டுகைகளும் இலாபங்களும் - 14%

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

54 ஆம் பக்கத்தில் 23 முதல் 27 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"'(அ) அப்பந்தியின் (1) ஆம் உட்பந்தியில், '(28%) சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, '2020, சனவரி 1 இற்குமுன்னர் 28%சதவீதத்திலும் 2020, சனவரி 1 இலிருந்து பயனுறும் வகையில் 24% சதவிதத்திலும் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

52 முதல் 54 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

55 ஆம் வாசகம்

77 ஆம் பக்கத்தில் 17 ஆம் வரியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"'வரிமதிப்பீட்டாண்டின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

78 ஆம் பக்கத்தில் 27 ஆம் வரியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலும் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"'மானது சொத்தக்களின்'';

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

56 தொடக்கம் 61 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

பட்டியல் அ

88 ஆம் பக்கத்தில் பட்டியல் அ வின் நிரை 14 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"51(4)(இ)	முதலாம் அட்டவணையின் 4 ஆம் பந்தியின் (2அ) என்னும் உட்பந்தியின் (ஓ),(ஔ) மற்றும் (ஔ) (ஔ) என்னும் விடயங்கள்

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"பட்டியல் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பட்டியல் ஆ

90 ஆம் பக்கத்தில் பட்டியல் ஆ வின் நிரை 18 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“26	83	01.01.2020 ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

91 ஆம் பக்கத்தில் பட்டியல் ஆ வின் நிரை 19 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“51(4)(இ)	முதலாம் அட்டவணையின் 4 ஆம் பந்தியின் (2அ) என்னும் உட்பந்தியின் (ஓ),(ஔ) மற்றும் (ஔ) (ஔ) என்னும் விடயங்கள் தவிர்ந்த 4 ஆம் பந்தியின் 2அ என்னும் உட்பந்தி	01.01.2020 ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

93 ஆம் பக்கத்தில் பட்டியல் ஆ வின் நிரை 13 இனை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“56(4)	ஆறாம் அட்டவணை 4 ஆம் பந்தி	01.03.2020 ”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“பட்டியல் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக”என பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சார்பாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13. ஒத்திவைப்பு (விஞ்ஞான அணுகுமுறை மற்றும் ஒருங்கிணைந்த திட்டத்தினூடாக கொவிட்டைக் கட்டுப்படுத்தல்): "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(மு.ப. 11.19 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்குவாராக" என சுகாதார அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(பி.ப. 1.08 மணிக்கு கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்கினார்.)

"கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக" என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(பி.ப. 2.01 மணிக்கு கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்கினார்.)

"கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்குவாராக" என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

(பி.ப. 3.31 மணிக்கு கௌரவ அஜித் ராஜபக்ஷ தலைமை தாங்கினார்.)

அவ்வேளை, நேரம் பி.ப. 5.30 மணியாகிவிடவே தலைமை தாங்கும் உறுப்பினர் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம், 2021 மே 05 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.